அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்


அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

தீபம் 8 நெறி 4 தமிழ் மாத இதழ் விலை ₹1 நவம்பர் 2017




எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!




## வாழ்த்தி வணங்குகிறோம்

மாதந்தோறும் பொருளாகவும்,
நிதியாகவும் வாரி வழங்கும்
ஆன்மநேய தயவாளர்
**பிரேம்குமார்**
**லாவண்யா பிரேம்குமார்**
தம்பதியினரை வாயர வாழ்த்தி
வணங்குகின்றோம்.

## தலை வணங்குகிறோம்


சென்னை வேளச்சேரி
19 தருமச்சாலைகளில் ஒன்றான
மதுராந்தகம் தருமச்சதாலையின்
பொறுப்பை கண்ணும்
கருத்துமாக கவனித்து வரும்
ஆன்மநேய உறவினர்
**டில்லி பாபு**
குடும்பத்தினரை வாயர வாழ்த்தி
தலை வணங்குகின்றோம்.



## “ தீபநெறி ” ஆசிரியர் குழு





**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைபேசி : 95518 49757



**செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைபேசி : 98659 39896



**இர. கங்கை மணிமாறன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கங்காதரபுரம், மயிலாடுதுறை.
கைபேசி : 94434 08824



**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைபேசி : 80564 38488



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைபேசி : 94440 73635



**ஜோதி சதுரகிரியார்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
வேளச்சேரி, சென்னை.
கைபேசி : 89393 76652



தருமம்

## தீபநெறி தொண்டர்களின் தினசரி தியானம்

ஆக்கம்
திரு. கே.என். உமாபதி அவர்கள்,
கே.கே. நகர்



தவம்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~



1. **அ**றியாமை அடியோடு அகலட்டும்!
2. **ஆ**ன்ம நேயம் ஆல்போல் தழைக்கட்டும்!
3. **இ**ல்லாமை இல்லாமல் புதையட்டும்!
4. **ஈ**வது இயல்பாய் இருக்கட்டும்!
5. **உ**யிரிரக்கம் எங்கும் தழைக்கட்டும் !
6. **ஊ**க்கமுற்று யாக்கைகள் ஒளிரட்டும்!
7. **எ**ல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும்!
8. **ஏ**ற்றத்தாழ்வு இடருற்றுப் போகட்டும்!
9. **ஐ**ம்பூதங்கள் மாசுபடுவதைத் தடுக்கட்டும்!
10. **ஒ**ன்றே இறையென உணர்த்தட்டும்!
11. **ஓ**யாமல் வையகத்தில் அருட்பா ஒலிக்கட்டும்!
12. **ஔ**டதமாம் அருட்பெருஞ்ஜோதி அற்புதங்கள் நடத்தட்டும்!

**தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!**

நித்ய தீப தருமச்சாலை எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை– 600 042.

**சத்தத் தலைவரைச் சாற்றும் அண்டங்களை**
**அத்தகை வகுத்த அருட்பெருஞ்ஜோதி (598)**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# அன்பின் ஆதாரம்

'தாய் முதலோரோடு' (அருட்பா 4133) என்னும் வள்ளலாரின் இரண்டு சொற்களில் எவ்வளவு உயிரோட்டம் காண முடிகிறது? முதலோரோடு என்பதில் அடங்கியவர் எவர்? தந்தை, தமையனார் இருவர், தமக்கையார் இருவர், தந்தையார் மருதூரில் கணக்கர் வேலை பார்த்ததால் அவருடன் கூடவே சிதம்பரத்திற்கு வந்த சிலர், கோயில் தரிசனத்திற்கு வந்த சிலர், அர்ச்சகர் போன்றோர் அடங்குவர். இவர்கள் அனைவரும் தராசின் ஒரு தட்டில் வைக்கப்பட்டால் இன்னொரு தட்டில் அதனைச் சமன் செய்யுமளவில், தோரணையில் உயிர்வில், மதிப்பில் ஏற்றியமர்த்தப்பட்டவர் அய்யாவின் தாய், சின்னம்மையார். தாய் ஒருபாதி என்றால் ஏறத்தாழ உலகர் அனைவரும் சேர்க்கப்பட்டால் கூட அது இன்னொரு பாதிதானே தவிர அதற்கு மேல் இருக்கவே முடியாது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இந்த இருவார்த்தைகள் தாய் ஒரு பாதி உலகு அனைத்தும் மீதிப்பாதி தான். மறுப்போர் உளரோ?.

'தாயாகி தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வம்' (அருட்பா 3906) தவழும் பருவத்திற்கு முன்னமேயே தந்தை மறைந்து விட்டதால் அய்யாவுக்கு தாய் மட்டுமே தெரியும். தாயின் உழைப்பிலும், அரவணைப்பிலும் தான் அய்யா வளர்ந்தார். தந்தை மகனுக்கென ஆற்ற வேண்டிய கடமைகளையும் அந்தத் தாய் தான் செய்தார். எனவே தான் அந்தத் தாயே தந்தையுமாகி தாங்கி நின்றதை மேலே அழகாக வாஞ்சையுடன் குறிப்பிடுகிறார். அந்த ஆண்டவனைக் காட்டியதே எனது இனிய நற்றாய்தான் என இதோ சொல்கிறார்.

'தன்னிகரில்லாத் தலைவனைக் காட்டியே என்னை மேலேற்றிய இனிய நற்றாயே' (அகவல் 1099-1100). எனை மேலேற்றி விட்டதும் அவள்தான் என்கிறார். தன்னிகரில்லா தலைவனைக் காட்டியதே அய்யாவின் தாய்தான். இன்னுமொரு வரி வேண்டுமானால் பாருங்கள். ஆன்ற சன்மார்க்கம் அணிபெற எனைத்தான் ஈன்று அமுதளித்தவள் என் தாய். அவள் என்னை ஈன்றதின் நோக்கமே உலக நெறியனைத்தும் சேர்த்தாலும், எட்டிப்பிடிக்க முடியாத உயர்ந்த, மிக உயர்ந்த, ஆன்ற சன்மார்க்க நெறிக்கு, அணிகலன்களை ஈட்டி, அதை அந்த சன்மார்க்கத்திற்குப் பூட்டி, அதை அவனிக்குக் காட்ட வேண்டும் என்பதற்காகத் தான் 'உலகரனைவரையும் சகத்தே திருத்தி சன்மார்க்க சங்கத்து அடைவித்திட, வருவிக்க உற்றேன்'... (அருட்பா 4585) என்னும் பாடலும் இதையொட்டியே வருதல் காணலாம். ஈன்று அமுதளிப்பது என்பது ஆடு, மாடுகட்கும் பொருந்தும். ஆனால் மனிதப் பிறவி என்பதை குறிக்கோள் ஒன்றின் நிமித்தமாகத்தான் எடுக்க வேண்டும். அதற்கு அந்தத் தாயின் நற்றவமும் நிச்சயமாகத் தேவை. ஆன்ற சன்மார்க்கம் அணி பெற வேண்டியே வள்ளலார் வருவிக்கவுற்றார்.

அதற்கு காரணமான அன்னை தன்னை ஈன்றதையும், அமுது அளித்ததையும் சொன்ன வள்ளலார், அவள் என்னென்ன இன்னல்களை அனுபவித்தாள் என்பதை எங்கும் காட்டினாரில்லை. குழந்தைக்குக் காய்ச்சல் என்றால் தாய் கலங்குவாள். குழந்தையின் நோய் தீரும் வரை அவள் மருந்து உண்பாள், அது குழந்தைக்கு தெரியாது அல்லவா? எனவேதான் தாயாரின் கஷ்டங்கள் பற்றி தனயன் எங்கும் காட்ட முடியவில்லையோ? அப்படிப்பட்ட அய்யாவின் தாய் ஒருநாள் மறைந்து விட்டாள். வள்ளலார் வருந்தவில்லை. அதோ இலையுதிர்ந்து நிற்கிறதே ஒரு மரம், அதன் தாய் யார்? இதோ இந்த நெற்பயிர் நீரின்றி வாடிச் சாய்ந்து கிடக்கிறதே இதற்கு தாய் யார்? (வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் அருட்பா 3471) (பசிவந்தால் பத்துவிதமான வேதனைகள், அவஸ்தைகள், வாட்டங்கள் வரும் என்பது அய்யா எழுதிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் உள்ளது. எனவேதான் எல்லாம் வாடினேன் என்கிறார்.) வயல் வரப்பின் மீது வாதநோய் கண்ட ஒருவன், காலை இழுத்து இழுத்துக் கோலை ஊன்றி நடந்து வரும்போது, சேற்றில் விழுந்து எழுந்ததால், உடலெங்கும் சேறும், நீருமாய் ஒரு பிடி சோற்றுக்காக, ஊரை நோக்கி வரும் இந்த நீண்டநாள் நோயாளியைக் கண்டு உளம் துடிப்பவர் யார்? எனக் கலங்குகிறார். அன்று முதலோ என்னவோ இவர் உலகிலுள்ள மனிதர்கட்கு மட்டுமல்ல வாழும் உயிரினங்கள் அத்தனைக்கும்தானே அவ்வுயிர்களில் தாய் வடிவாக வாழ்ந்து அவர்கட்கு ஏற்படும் அறியாமை, ஆணவம், இன்னல்கள், ஈகையின்மை, உயிர்ப்பலி, இச்சை, பரோபகாரமின்மை, தெய்வ நிந்தனை போன்ற நோய்கட்கு (தமக்கே அந்த நோய் வந்ததாக எண்ணி) அவர்கட்காக மருந்துண்ணும் முகமாக அதனையொப்ப வரிகளால் அருட்பாவில் எப்படியெல்லாம் கொட்டியிருக்கிறார் பாருங்கள்.

1. எருதாக திரிந்தேனுக்கு (அருட்பா 3708)

**நாதமாம் பிரமமும் நாத அண்டங்களும்**
**ஆதாரம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (600)**

2. பனித்த மனக்குரங்காட்டிப் பலிக்குழலும் கொடியேன் (அருட்பா 3296)

3. பசையறியக் கருங்கல் மனப் பாவிகளிற் சிறந்தேன் (அருட்பா 3298)

4. நெடுந்தூரம் ஆழ்ந்தும் உதவாப் படுங்கிணறு போல்வேன் (அருட்பா 3302)

5. குங்குமம் சுமந்த கழுதையேன் அவப் பொழுதையே கழிப்பேன் (அருட்பா 3307)

6. கொட்டிலையடையாப் பட்டிமாடு அனையேன் (3347)

7. பெரியவர் மனம் வெறுக்க செய் எட்டியே, மண்ணாங்கட்டியே அனையேன் (அருட்பா 3351)

8. உதவாத் துருப்பிடி இருப்புத் துண்டுபோல் கிடந்து தூங்கினேன். (அருட்பா 3363)

9. தடிக்கடி நாய்போல் நுகர்ந்து வாய் சுவைத்து தவம் புரிந்தவன் என நடித்தேன். (அருட்பா 3364)

10. படம்புரி பாம்பிற் கொடியேன், கொடிய பாவியிற் பாவியேன். (அருட்பா 3563)

11. சாவியே போன புஞ்சையே அனையேன். (அருட்பா 3365)

12. இன்மையுற்றவருக்கு உதவேன், பொருளை எனைவிடக் கொடியவருக்கு ஈந்தேன். (அருட்பா 3572)

13. பட்டமே காட்டிப் பணம் பறித்து உழன்றேன். (அருட்பா 3573)

14. புன்செய் களியுணும் மனையிலே சருக்கரை கலந்த காய்ச்சு பால் கேட்டுண்ட கடையேன். (அருட்பா 3576)

15. எல்லாம் அறிந்தவர் போல் பிறர்க்கு உரைத்தேன். (அருட்பா 3577)

இப்படி அருட்பாவிலே ஆயிரமாயிரம் வரிகள் எழுதப்பட்டதன் நோக்கம் என்ன? மேலுள்ள ஒரு சில வரிகட்காவது நாம் சிறிய அளவில் ஓரளவு விளக்கம் தெளிந்து செயல்பட விழையலாமா? எருது மாடுகள் போல வீதிகளில் திரிகிறோமே விளைநிலத்தை என்றாவது உழுதது உண்டா? வானமேறி வைகுந்தம் போகலாமென எண்ணம் கொண்டு பலியிடுகிறோமே, இதுவரை எவராவது அங்கே போனவரைப் பார்த்ததுண்டோ? சிறிது தூரல் விழுந்தாலும் இங்கும், அங்கும் பசுமை தோன்றிடும். ஆனால் கருங்கல்லின் மீது அது தோன்றுமா? காருண்யமற்ற வாழ்க்கை வாழ்பவர்க்கு இது தெரிய வாய்ப்பு உண்டா?

ஆழத் தோண்டித் தோண்டிப் பார்த்தும் நீர் வராத கிணற்றைப் பார்த்து அழுகின்ற உழவனைப் போல நம்மைப் படைத்தவன் நம்மிடம் பரோபகாரம் வற்றிப் பாழுங்கிணறாய் நாம் போவது பற்றி கவலையுடனிருப்பது கண்ணில் பட்டதுண்டா? மூட்டை நிறைய குங்குமத்தை முதுகிலேற்றிச் செல்லும் கழுதை அதில் கொஞ்சமெடுத்து என்றாவது நெற்றியில் வைத்துக் கொள்ளுமா?

'நல்லறிவு' மனிதனுக்கு ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும் பூவுலகெல்லாம் புல்லறிவு கொண்டே அவர்கள் துள்ளி நகையாடி வருதல் கண்டு எவரும் எள்ளியதுண்டா?

ஓநாய்களிடமிருந்து மாடுகளைச் காப்பாற்ற எண்ணி குடியானவன் கொட்டில் கட்டி வைத்துக் கூப்பிட்டாலும் அதை அடையப் பட்டி மாடு போல ஆன்ற சன்மார்க்கமெனும் ஒழுக்கத்தால் கட்டப்பட்ட கொட்டிலுக்கு வராமல் மதவாதிகளிடம் சிக்கி மல்லுக் கட்டி நிற்கும் மனித சமுதாயத்துக்கு வழிகாட்ட எவராவது உண்டா?

எட்டிக்காயாகவும், மண்ணாங் கட்டியாகவும், துருப்பிடித்த இரும்புத் துண்டாயும் கசந்தும், உபயோகமற்றும், உறங்கிக் கொண்டு இந்த பெறுதற்கரிய மனித தேகத்தைப் பெற்ற பின்பும் விழிப்புணர்வு இன்றி வீணாகப் போகிறோமே இதற்கு விடியும் காலம் உண்டா? படமெடுக்கும் பாம்பு தீண்டினால் மரிப்போர் ஒருவரே! நச்சுமனம் கொண்ட மனிதர்களின் இனவெறி, மத வெறியால் இறப்போரின் எண்ணிக்கை ஏறுகிறதே தவிர என்றாவது இறங்கியதுண்டா? உரியவனோ வறியவன். இருப்பதோ புன்செய் நிலம். விதைத்து மூன்று மாதம் கழித்து அது புதராய் விளைந்தால் அவன் பதறாமல் என்ன செய்வான்? காணி, பூமியை அடகு வைத்தும், காது மூக்கிலுள்ளதை கழற்றி விற்றும் படிக்க வைத்த பின்னால் பெற்றோர்களை நட்டாற்றில் கைவிடும் பிள்ளைகளாய் இருக்கிறோமே இதை மாற்றிட இக்கால இளைஞர்கள் நினைத்துப் பார்க்க நேரமாவது உண்டா?

பட்டப்பகலில் பதைக்கும் வெயிலில், ஒட்டிய வயிருடன் ஒரு இட்லி கிடைக்குமா என பல்லைக் கடித்து இருமிக் கொண்டே ஏங்கும் பரட்டைத்

**பகர்பரா சத்தியைப் பதியும் அண்டங்களை**
**அகம்அற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (602)**

தலையனைப் பார்க்க கூசி அவனைக் கடந்து பட்டாடை அணிந்து வரும் படாடோப பக்தர்கள் வழிபாட்டுத் தலங்களின் உள்ளே ஓடிச் சென்று உண்டியலை நிரப்பிட்டு வருகிறார்கள்! இது கண்டு எவரேனும் அழுததுண்டா? சாதாரண காய்ச்சல் கண்ட நோயாளி, நாலெழுத்துப் பட்டம் பெற்ற மருத்துவரிடம் சென்றால் ஐம்பது ரூபாய், இரண்டெழுத்து பட்டம் பெற்ற ஒரு சிலரிடம் போனால் நூறு ரூபாய் தருகிறானே! பட்டங்காட்டிப் பணம் பறிக்கிறோமே!

வரகுக் களிக்கே கஷ்டப்படும் விவசாயி வீட்டுத் திண்ணையில் ஏறி அமர்ந்து கொண்டு என் சாதியென்ன? அந்தஸ்தென்ன? மதமென்ன? உனக்கு உபதேசம் செய்கிறேன். உள்ளே போய் ஒருபடிப்பாலை அரைப்படியாக சுண்டக் காய்ச்சி சர்க்கரை நிறையப் போட்டுக் கொண்டு வா என்று கேட்டு வாழும் மனிதர்களை நம் நாட்டில் என்றைக்காவது உபசரிக்காமல் உதாசீனம் செய்ததுண்டா? எத்தனை நாடுகள்? எவ்வளவு மேடைகள் சுற்றி வருகிறோம்? சந்தேகம் ஏதாவது இருந்தால் என்னைக் கேள் எனக்கு எல்லாம் தெரியும்! காணிக்கை கொடுத்து விட்டு, என் காலில் விழுந்து ஆசி பெற்றுக்கொள் என்று சொல்லி அதையே தொழிலாகக் கொண்டு உல்லாசக் காரில் பவனி வரும் கற்றறிவாளர்களைக் காணும்போது நம்மில் ஒருவராவது அவரைப் பார்த்து முன்னுக்கு பின் முரணாய் இருக்கிறீரே எனக் கேட்டதுண்டா?

இப்படிப்பட்ட நமது குணங்களை எல்லாம் நாம் கொண்டிருப்பது போன்ற பாவனையில் நமக்காக, நாம் திருந்துவதற்காக அய்யா எழுதுகிறார். குழந்தைகளாகிய நமது நோய் தீர வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் நமக்கு மட்டும் மேலே கண்ட எந்நோயும் தீர்வதற்கான அறிகுறியே தென்படவில்லை. இயற்கையின் விதிப்படி அனைவருக்கும் தாய் உண்டு. அவர் ஒருநாள் மறைந்திடுவர். இருந்தாலும் எனது தாய் என்னும் வார்த்தைக்கு நிகரான வாசகமோ, எண்ணமோ, தன்மையோ, அன்போ, கனிவோ, பரிவோ, பாசமோ, உண்மையோ, உணர்வோ, வேறு எதிலும் காணவே முடியாது. தாயை இழந்தவர்கட்கு உலகில் வேறு தாய் கிடையாது என்பதும் உண்மை. இருப்பினும் வள்ளலார், மேற்சொன்னவைகளையெல்லாம் நம்மைக் குறித்ததாய், அழுததாய், தொழுததாய், எழுதியதாய், எண்ணியதாய், விண்ணப்பித்ததாய், முறையிட்டதாய், தெண்டனிட்டதாய், நல்ல மருந்தாய், அருட்பாவெனும் விருந்தாய் இருக்கிறது.

"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து" (அருட்பா 5576) போன்ற பாடல்களை உலகரெலாம் பின்பற்றி "அன்பே நிறைந்து நிறைந்து" வாழ வேண்டுமென்பது அய்யாவின் எண்ணம். அப்படிப்பட்ட அன்பின் நிறைவில்தான் சிவம் இருக்கும். "அன்பே சிவம்" எனும்போது அந்த சிவத்திற்கு ஆதாரம் அன்பு என்பது வெளிப்படை, அப்படியானால் அந்த அன்பிற்கு ஆதாரம் ஏதோ ஒன்று இருக்க வேண்டுமே அது எது? அய்யாவின் சொற்களையும், செயல்களையும், எல்லாவுயிர்களும் இன்புற்று வாழ வேண்டுமெனும் ஏக்கமும் பார்க்கும் போது, அந்த தாய்மைக் குணமே அன்பாகிறது எனவே எல்லோருக்கும் அவரவரின் நற்றாய்தான் "அன்பின் ஆதாரம்".

**K.N. உமாபதி**
**K.K. நகர் - 95518 49757**

---


# சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலை

கடந்த 10 ஆண்டுகளாக தினசரி நூற்றுக்கணக்கானவர்களின் பசியைப் போக்கக் கூடிய நித்ய தீப அன்ன தருமச்சாலைக்கு ஜோதி தரிசன நாளில் வருகை தந்து, மாத பூச நாளில் 6 திரை நீக்கி ஜோதி தரிசனம் செய்து, அருளின்பம் பெற தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் அழைக்கிறோம்!



**அடுத்த மாத பூச ஜோதி தரிசனம்**
**07.12.2017 (வியாழக்கிழமை)**
**இரவு 8.00 மணிக்கு**

**நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல் : 9444073635


**பரசிவ பதியைப் பரசிவாண்டங்களை**
**அரசுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி (604)**

# விலாசம் தெரியாத மனிதர்கள்

உலகம் தோன்றி உயிர்கள் தோன்றி மனிதனாக பிறப்பு எடுத்த மனிதர்கள் அறிந்து கொள்வது என்ன?

நாம் எங்கு இருந்து வந்தோம்? ஏன் வந்தோம்? எதற்க்காக வந்தோம்? மீண்டும் எங்கு செல்ல வேண்டும்? என்ற உண்மை தெரியாமல் பிறந்து பிறந்து, இறந்து இறந்து, பல உயிர்கள் எடுத்து, பல உடம்புகள் எடுத்து வாழ்ந்து கொண்டே உள்ளோம்.

வள்ளல் பெருமானுக்கு முன்பு தோன்றிய அருளாளர்கள் நாம் செல்ல வேண்டிய இடம் சொர்க்கம், கைலாயம், வைகுண்டம், பரலோகம், பரம பிதா வாழும் இடம், அல்லா இருக்கும் இடம் என்ற பொய்யான இடங்களை காட்டிவிட்டு அவர்களும் மடிந்து போனார்கள்.

நாமும் அவற்றை எல்லாம் உண்மை என்று நம்பி பல பிரிவுகளாக, பல மதங்கள், பல சமயங்கள் சொல்லியதை ஏற்றுக் கொண்டு அலைந்து திரிந்து அழிந்து கொண்டே உள்ளோம்.

வள்ளல்பெருமான் ஒருவரே சரியான வழியைக் காட்டி நாம் செல்லவேண்டிய இடத்தைக் காட்டி, எப்படி வாழ்ந்தால் அங்கு செல்ல முடியும் என்பதை தான் வாழ்ந்து மரணத்தை வென்று வழிகாட்டி உள்ளார்.

நாம் செல்ல வேண்டிய இடம் பலகோடி அண்டங்களை இயக்கிக் இயங்க வைத்துக் கொண்டு இருக்கும் இடம் அருட்பெருவெளி என்பதாகும். அங்கு அருள் நிறைந்து இருக்கும். அந்த அருளை இயக்குவது அருள் நிறைந்த பேரொளி என்னும் இயற்கை உண்மையாம். அருட்பெருஞ்ஜோதி – என்பதாகும். அந்த அருட்பெருஞ்ஜோதிதான் உண்மையான கடவுள் என்பதை கண்டு உண்டு, களித்து, அதன் மயமாகி உலகில் உள்ள நமக்கு எல்லாம் வழிகாட்டி உள்ளார்கள்.

அந்த அருள் பெருவழியில் உள்ள ஆன்மா ஆகாயத்தில் இருந்துதான் ஆன்மாக்கள் எல்லாம் அனைத்து அண்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆன்மாக்கள் என்னும் ஒளிதான் கடவுளின் குழந்தைகள் என்பதாகும்.

இந்த பஞ்சபூத உலகத்தில் ஆன்மாக்கள் வந்து உயிரையும் உடம்பையும் எடுத்து வாழ்ந்து கொண்டு உள்ளன. உடம்பும் உயிரும் ஆன்மாவைப் பற்றிக் கொண்டு இருக்கும் வரை ஆன்மாக்கள் அருட்பெரு வெளிக்கு செல்ல முடியாது என்பதை வள்ளல் பெருமான் தெள்ளத் தெளிவாக தெரிவித்து உள்ளார்.

இந்த உலகத்தில் வாழும் ஆன்மாவிற்கு ஜீவ தேகம் உள்ள ஆன்மா என்று பெயர். உடம்பையும் உயிரையும் ஒளிமயமாக மாற்றிக் கொண்டால் அதற்கு ஆன்ம தேகம் என்று பெயர். ஆன்ம தேகம் எடுத்த ஆன்மாக்கள் மட்டுமே இந்த பஞ்ச பூத உலகை விட்டு வெளியேற முடியும். அதற்கு மரணம் இல்லாப் பெருவாழ்வு என்று பெயர் வைத்துள்ளார் வள்ளல்பெருமான்.

ஆண்டவர் இருக்கும் விலாசத்தை மக்களுக்கு கொடுத்து அங்கு செல்லும் வழியைக் காட்ட வந்தவர்தான் அருட்பிரகாச வள்ளலார்.

உடம்பையும் உயிரையும் ஆன்ம தேகமாக மாற்றும் ஆற்றல் சக்தி அருளுக்கு மட்டுமே உள்ளது. அந்த அருளைப் பெறுவதே மனித தேகம் எடுத்த ஆன்மாக்களின் செயல்களாகும்.

அருளைப் பெறுவதற்கும் அங்கு செல்வதற்கும் எவை எவை தடையாக இருக்கின்றது. அவற்றை எல்லாம் எவ்வாறு விடவேண்டும், விலக்க வேண்டும். அங்கு செல்வதற்கு எந்த எந்த காரியங்களை செயல்களை பின்பற்ற வேண்டும் என்பதை திருஅருட்பா ஆறாம் திருமுறையில் மிகத் தெளிவாக எழுதி வைத்துள்ளார். படித்து அறிந்து கொள்வது மனித தேகம் படைத்த அறிவு உள்ளவர்களின் செயலாகும்.

வள்ளல் பெருமான் விலாசம் கொடுத்துள்ளார். விலாசத்தை கண்டு பிடித்து செல்வது நமது முயற்சிச்சியாகும். நமது கடமையாகும்.

அறிவைக் கொண்டு அறிவைத் தேடவேண்டும். பின் அருளைக் கொண்டு அருளைத் தேடவேண்டும். அருள்தான் ஆண்டவர் இருக்கும் இடத்தை சரியாக காட்டும்.

முயற்சித்தால் முடியாதது ஒன்றும் இல்லை.

அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896

**எண்ணில்பல் சத்தியை எண்ணில் அண்டங்களை**
**அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (606)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் தாம்பரம் குட்லைஃப் ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தின் குழந்தைகளுக்கு அன்போடு அன்னம் பாலித்த காட்சிகள்.











அளவில்பல் சத்தரை அளவில் அண்டங்களை
அளவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (608)

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் திருவீழிமிழலை, தேவதானம்பேட்டை, கெங்கவரம் தருமச்சாலைகளில் நாள்தோறும் அன்னக்கஞ்சி வழங்கப்படும் காட்சி.







**உயிர்வகை அண்டம் உலப்பில எண்ணில**
**அயர்வற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (610)**

# அழுகையே தொழுகையாய் ஆகுமா?

நினைந்து நினைந்து
உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து
அன்பே நிறைந்து நிறைந்து
ஊற்று எழும் கண்ணீர் அதனால்
உடம்பு நனைந்து நனைந்து, நம்முரிமை நாயகனை
வனைந்து வனைந்து ஏத்தும்
வம்மின் உலகியலீர் என்று வாழ்வியல் நெறிகளை
வகுத்துக் கூறி நெய்யாய் நெக்குருகி
நேயம் வளர்த்தவர் –வள்ளலார்.

அல்லல்பட்டு ஆற்றாது, அழுது புலம்பி அவலத்தில் சிக்கிக்கிடக்கும் ஆன்மாக்களுக்காக – அழுகையைப் புதுவிதமான தொழுகையாக்கிய மெழுகுவர்த்தி... அவர் நம் தமிழ்க்கவிஞர்களும் நாயன்மார்களும் ஞானிகளும் பெரும்பாலும் அருளமுதம் பெற்று ஆனந்திக்க வேண்டி அடிவாரம் நனைய அழுதவர்கள்தான். யானே பொய்.. என் நெஞ்சும் பொய். ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே என்பார், வான்கலந்த மணிவாசகர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்பார் ஞானசம்பந்தர்.

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் இணைவிழிகள் என்பது அப்பர் பெருமானின் அருள் பிழியும் தோற்றம்!

நெஞ்சு பொறுக்குதில்லையே. இந்த நிலைகெட்ட மாந்தரை நினைந்துவிட்டால் என்று நாட்டுக்காகப் பாட்டில் அழுதார். –கவியரசர் பாரதியார்!
இதுபோல் ஏராளமாய் அழுதுள்ளனர் – இன்னும் பலர்!

ஆனால்...

வள்ளல் பெருமான் ஒருவர்தான்...

அழுகையை உருக்கமாக்கி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைத் தரிசிக்கும் அற்புத வழியை அறிமுகம் செய்தார். கற்சிலையின் முன்னால் நின்று கண்ணால் அழுவதே தீர்வாகுமா? அழுவது மட்டுமே அருளைப் பெறுவதற்கான வழியாகுமா? அருட்செல்வத்தைப் பெற அவ்வழுகையைத் தவமாக்குவது எங்ஙனம்? அத்தவமும் மெய்த்தவமாய் ஆவது எவ்வாறு, என்பதை, அவர் விளக்கியருளிய கோணம் வித்தியாசமானது.

“ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை” என்னும் சொல்லாட்சியில் ஆன்ம உருக்கம் தான் உண்மையான கடவுள் வழிபாடு என்பதை அவர் வலியுறுத்தும் விதம் எவரும் சொல்லாதது. சிந்தைக்கு அருட்பெருஞ்சோதி! செயலுக்கு தனிப்பெருங்கருணை – என்று வழிபாட்டை அவர் வடிவமைத்த விதம் வரலாற்றுச் சிறப்புடையது. மண்ணுலகதனில் உயிர்கள்தாம் வருந்தும் வருத்தத்தைக் கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும் கணமும் நான் சகித்திட மாட்டேன்! – என்று நைந்து உயிர்வாடி நலிந்து நிற்கும் அவர் நெஞ்சத் தடத்தில் வரைபடமாய் விரிந்து நிற்கும் உயிரிரக்கம் என்னும் ஒப்புரவுக் கொள்கை உலகப்பொதுமை உடையது.

எவ்வுயிரும் பொதுவெனக் கண்டு இரங்கி உபகரிக்கின்றார் யாவர்? அந்தச் செவ்வியர்தம் செயலனைத்தும் திருவருளின் செயலெனவே தெரிந்தேன் என்றும், யாரே என்னினும் இரங்குகின்றார்க்குச் சீரே அளிக்கும் சிதம்பர சிவமே என்றும், இவைபோன்று இன்ன பிறவாறும் அருட்பா முழுவதும் அழுத்தமாய்ப் பதிவாகியுள்ள அவர்தம் ஆன்ம அனுபவம் இறவாப்பெருவரத்தின் இதயத்துடிப்பாய் நிற்பதென்றால் அது பொய்யன்று புனைந்துரையுமன்று. மெய்யென்று உணர்வாரே மேன்மக்கள் ஆவர்.

கருணையொன்றே வடிவாகி எவ்வுயிரும் தம்முயிர்போல், கண்டு மகிழ்வதுதான் கடவுள் வழிபாடு என்பதே அவர் கண்டுரைத்த கடவுட்கொள்கை. ஜீவகாருண்யம் இல்லாமல் செய்யப்படும் எந்த அர்ச்சனையும் அழுகையும் வணக்கமும் வழிபாடும், நீராட்டும், தீபதூபமும், வெற்றுச் சடங்குகள் என்பதை

**களவில கடல்வகை கங்கில கரையில**
**அளவில வகுத்த அருட்பெருஞ்ஜோதி (612)**

வலியுறுத்திப் பேசுவதே அவர் விண்டுரைத்த சுத்த சன்மார்க்கம் ஜீவகாருண்ய ஒழுக்கமே சன்மார்க்கம் என்று அறியப்படும் என்று தெள்ளத் தெளிவாக அவர் அறிவுறுத்துகிறார்.

பாவ புண்ணியங்களுக்குப் பலரும் தந்தார்கள் பல்வேறு விளக்கம். ஆய்ந்து பார்த்தால் வள்ளலார் எவர்க்கும் புரியுமாறு எளிமையாய்ச் சொன்னார். புண்ணியமென்பது ஜீவகாருண்யம் ஒன்றே பாவமென்பது ஜீவகாருண்யம் இல்லாமை ஒன்றே என்று இவ்வுண்மையறிவு வாய்க்கப் பெற்றவர்களே பேரின்ப லாபத்தைப் பெற்றவர்கள் என்றும் அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயமானவர்கள் என்றும், சத்தியமாக அறிய வேண்டும் என்று சமரச சன்மார்க்கத்தை அவர் சர்வ சுதந்திரமாய்ப் பிரகடனப்படுத்தினார்.

ஆன்ம உருக்கமும் காருண்யமும் உண்டாக உண்டாகத்தான் கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டுப் பூரணமாக விளங்கும் என்பதே அவர் போதித்த நித்தம் நிலைக்கும் சன்மார்க்க சூத்திரம். தயிருக்கும் அதைக் கடைகின்ற மத்துக்கும் இடையே நெகிழ்ச்சி உண்டாக-உண்டாக அதன் உள்ளிருக்கின்ற வெண்ணெயும் நெய்யும் வெளிப்படுதல்போல... ஆன்ம உருக்கத்தின்போது கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டே தீரும் என்று ஒரு நடைமுறை உவமையின் மூலம் இயற்கைத் தத்துவத்தை இனிக்க இனிக்கப் புரியவைத்தார் அவர்.

இவ்வண்ணமாய் இயற்கை உண்மைக் கடவுள் வழிபாட்டை எளிவந்த முறையில் இயம்பிச் சென்றவர் எவரும் இலர். என் வழி தனி வழி. அது இயற்கைப் பொதுவழி. மற்ற வழிகளை எல்லாம் மறுக்க வந்த ஒரே வழி என்று துணிச்சலாய்ச் சொன்னவர் அவரன்றி வேறு யார்?

கவிமாமணி
கங்கை **மணிமாறன்**
கங்காதரபுரம்
+91 9443408824

---

தீபநெறி

தீபநெறி இதழ் குறித்த தங்களின் கருத்துக்களை, மேலான ஆலோசனைகளை, கட்டுரை ஆசிரியர்களுக்கு கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம்.

**விளம்பரங்களில்லா, விலையில்லா மாத இதழ்**

**தீபநெறி மாதஇதழ்**

தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற / நிறுத்த முகவரி மாற்றம் தெரிவிக்க **9444073635** என்ற எண்ணுக்கு **முகவரியை** SMS / WhatsApp செய்யவும்.

**கடலைவை அனைத்தும் கரையின்றி நிலையுற**
**அடலனல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி (614)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் வடலூர் சத்திய தருமச்சாலையில் மாத பூச திருநாளில் தொடர்ந்து 48-வது மாதமாக அணையா அடுப்பின் உலையில் அயராது உழைக்கும் ஆடுகின்ற சேவடிகள்.











**கடல்களும் மலைகளும் கதிகளும் நதிகளும்**
**அடல்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (616)**

# சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் தீபாவளி திருநாளை முன்னிட்டு 14 ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லத்திற்கு லட்டு மற்றும் காரா பூந்தி தயார் செய்யப்படும் காட்சி.








கடலிடைப் பல்வளம் கணித்து அதில் பல்உயிர்
அடலுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (618)

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

**திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா**

## 20. நாதாந்த வெளி

39. பெரியநா தாந்தப் பெருநிலை வெளியெனும்
40. அரியசிற் சபையில் அருட் பெருஞ் ஜோதி

(உ–வி.) நாதம் என்பது ஒலி, ஓசையாகும். இவ்வுலகில் சிற்றணு முதல் பேரண்ட கோடிகள் வரை யாவும் அரிய ஓர் ஆற்றலால் இயங்கிக் கொண்டேயிருக்கின்றனவாம். அந்த இயக்கத்தால் சிற்றசைவு முதல் பெருஞ் சுழற்சி வேகம் வரை காணப்படுகின்றன. இவ்வியக்க சக்தியால் மிக நுண்ணிய ஒலி முதல் அளவரிய பேரோசை வரை உண்டாகின்றனவாம். செவிப் புலனாய்க் கேட்கப்படும் ஒலியோ மிகச் சிற்றெல்லை கொண்டதேயாகும். அவ்வெல்லைக்கு அப்பாலுள்ள ஒலியைக் காதால் சாதாரணமாய்க் கேட்க முடியாது. வானொலிக் கருவி முதலியவற்றால் கேட்டறிதல் கூடும். சாதாரண நாதவொலியையே ஏழிசைப் பண்ணொலியாய் ஆக்கிக் கொண்டு இசைத்து இசையமுதம் பருகி மகிழ்கின்றான் மனிதன். நாத சங்கீத ஒலியிலே மனம் லயித்து பரவசம் அடைவது தெய்வீக நிலை எனக் கொண்டாடப்படுகின்றது. அத்தெய்வ நிலைப் பேற்றை நாதப் பிரம்மானுபவம் என்கின்றனர் அம்மேதையர். இதைவிட யோக சித்தர்கள் மன ஒடுக்க நிலையில் நாத அந்தத்திலே ஜோதிக் காட்சியைக் கண்டு அதனாலே அற்புத சித்திகளும் எய்திவிடுகின்றனர். இவற்றை எல்லாம்விட நம் ஞானசித்தராகிய வள்ளற்பெருமானோ, திருவருளாலே உள்ளுருகி ஒருமையுற்று நின்று பரநாத நிலைக்கு அப்பால் விளங்கும் பெருஞ்ஜோதி மலையைக் கண்டார். அந்தப் பெருஞ்ஜோதிக்கு நடுவே மாற்றறியாப் பொன்ஒளி அம்பலத்தைக் கண்டார். அவ் அம்பல நடுவிலே வள்ளற் பெருஞ் ஜோதிக் கடவுளையே கண்டார். கண்டு கலந்து அதுவாகி விளங்கி விடுகின்றார். இதுவன்றோ நாதாந்த வெளியில் ஒவ்வொருவரும் பெற வேண்டிய பெருநிலை! ஜோதியுட் ஜோதியுட் ஜோதியாய் உள்ள கடவுளட்காட்சியைத்தான் நாதாந்தப் பெருவெளியில் கண்டு கொள்ளவேண்டியிருக்கின்றதாம். அருள் விசாரத்தால் அறிவரிய சிற்றம்பலத்துற்று அருளனுபவத்தால் நித்தியானந்தமுறவேண்டுவது நம் கடமையாகும். மற்றபடி நாதகீதத்தில் மயங்கிப் பெறும் சுகமும், நாதாந்த ஜோதிக் காட்சியில் பெறப்படும் நவநாத சித்தர்களின் கருமசித்திகள் தரும் இன்பமும் பெரியனவல்லவாம். நம் வள்ளல் அனுபவம் தரும் இன்பமும் சான்றும் இவை :

ஈற்றறியேன் இருந்திருந்திங் கதிசயிப்ப தென்நீ
    என்கின்றாய்நீ எனைவிட் டேகுதொறு நான்தான்
காற்றறியாத் தீபம்போல் இருந்திடுமத் தருணம்
    கண்டபரி சென்புகல்வேன் அண்டபகி ரண்டம்
தோற்றறியாப் பெருஞ்ஜோதி மலைபரநா தத்தே
    தோன்றியதாங் கதனடுவே தோன்றியதொன் றதுதான்
மாற்றறியாப் பொன்னொளியோ அவ்வொளிக்குள் ஆடும்
    வள்ளலருள் ஒளியோஈ ததிசயிக்கும் வகையே.

சிற்றம்பல வாழ்வு பெற்று அருள் ஒளிவண்ணமாய்த் திகழ்பவர் பெரிய நாதாந்தப் பிரபஞ்சமுற்றும் கண்டு அருட்சித்து விளைத்துக் கொண்டிருப்பர். இது வள்ளல் அனுபவம்.

**மலையிடைப் பல்வளம் வகுத்து அதில் பல்உயிர்**
**அலைவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (620)**

# நித்ய தீப தருமச்சாலை

## கடந்த 10 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 19 தருமச்சாலைகள் மூலம்

# அன்னம் பாலிப்பு




நித்ய தீப தருமச்சாலை எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை- 600 042.

**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற அன்புடன் அழைக்கின்றோம்! தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 19 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ.19, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,90,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும் : 044 - 2244 2515 / 94440 73635**

Donations may be sent by crossed cheque to:

**DEEPAM TRUST**

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

| | | |
|---|---|---|
| Bank / Branch | : | State Bank of India / IIT Branch |
| Current A/c. No. | : | 30265475129 |
| IFSC | : | SBIN0001055 |

**ஒன்றில் ஒன்றே ஒன்றிடை ஆயிரம்**
**அன்றற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (622)**

பல ஆண்டுகளாக மாதந்தோறும் பொருளாகவும், அருளாகவும், நிதியாகவும் வாரி வழங்கும் வள்ளல்களை வாயார வாழ்த்துகின்றோம்

| S.No | Name | Place | S.No | Name | Place |
|---|---|---|---|---|---|
| 1 | M/s.Martin Vegetables | Velachery | 44 | Mr.Ponnambalam S. | Anna Nagar |
| 2 | M/s.Periyandavar Stores | Velachery | 45 | Mr.Pradheep G. | Saidapet |
| 3 | M/s.Poorvika Mobiles Pvt Ltd | Ekkattuthangal | 46 | Mr.Purnachandra Rao M. | Pammal |
| 4 | M/s.Sri Mutharamman Traders | Velachery | 47 | Mr.Radhakrishnan K. | Taramani |
| 5 | Mr.Anil Kumar Goel | Chennai | 48 | Mr.Raj Kumar T. | IIT Madras |
| 6 | Mr.Arumugam | Pugazur | 49 | Mr.Raja V.P. | Karur |
| 7 | Mr.Arumugam P. | Madipakkam | 50 | Mr.Ramani G. | Velachery |
| 8 | Mr.Arun Kumar K. | U.S.A. | 51 | Mr.Ranganatha Gupta R. | Vadapalani |
| 9 | Mr.Ashok Kumar S. | Pallikaranai | 52 | Mr.Rathiesh T.R. | MMC Post |
| 10 | Dr.Ashokan A. | Guindy | 53 | Mr.Ravi Kumar S. | Delhi |
| 11 | Mr.Balaji M.V. | Adyar | 54 | Mr.Ravikkannan C. | USA |
| 12 | Mr.Balakrishnan M. | Velachery | 55 | Mr.Revanth Vignesh Balasundaram | Purasawalkam |
| 13 | Mr.Baranidharan S. | Athipattu | 56 | Mr.Saravana Kumar | Orchid Chemical |
| 14 | Mr.Bhagavathi Priya | Redhils | 57 | Mr.Sasitharan U. | Tirunelveli Town |
| 15 | Mr.Bharani | Vadapalani | 58 | Mr.Sathees Kumar P. | Rajakilpauk |
| 16 | Mr.Chandrasekara Prabhu | Neelankarai | 59 | Mr.Selva Pillai P.V. | Ramapuram |
| 17 | Mr.Chellappa A. | Velachery | 60 | Mr.Selvaraj A.N. | S Kolathur |
| 18 | Mr.Devi Somasundaram | Puzhuthivakkam | 61 | Mr.Selvaraj K.,Thanganarayana Super Market | Velachery |
| 19 | Mr.Dhatchanamoorthy | Orchid Chemical | 62 | Mr.Senthieel Kumar K.N. | Velachery |
| 20 | Mr.Elumalai | St. Joseph Collage | 63 | Mr.Shanmuganathan | Orchid Chemical |
| 21 | Mr.Ganesan G. | Velachery | 64 | Mr.Shanmugasundram | Trichy |
| 22 | Mr.Gokul Kumar B. | IIT Madras | 65 | Mr.Sivabalan K. | Medavakkam |
| 23 | Mr.Hari Krishnan M.A. | Chennai | 66 | Mr.Sreeram Chellappa | Besant Nagar |
| 24 | Mr.Hariharan R. | Velachery | 67 | Mr.Sridhar C.D. | IIT Madras |
| 25 | Mr.Jawin Kumar B.P. | Perumbakkam | 68 | Mr.Subbaiah | Velachery |
| 26 | Mr.Jayaraman G. | Kodampakkam | 69 | Mr.Suresh P. | Hosur |
| 27 | Mr.Kalidoss (IIT-Retd.) | Ashok Nagar | 70 | Mr.Thirumurugan | Orchid Chemical |
| 28 | Mr.Kamalakannan K.V. | Velachery | 71 | Mr.Vedachalam R. | TAFE |
| 29 | Mr.Kannabiran J. | Velachery | 72 | Mrs.Ahiladevi E. | Medavakkam |
| 30 | Mr.Kannan K. | Velachery | 73 | Mrs.Lakshmi N. | Velachery |
| 31 | Mr.Kumaraguru V. (Nandhini Builders Velachery) | Ramapuram | 74 | Mrs.Lakshmi R. | Madurai |
| 32 | Mr.Kumaran M. | Velachery | 75 | Mrs.Meena Babu S. | Vettuvankeni |
| 33 | Mr.Mahendran K. | Atthipattu Camp | 76 | Mrs.Meena Moorthy | Thiruvanmiyur |
| 34 | Mr.Mohan C. | Kadambatur | 77 | Mrs.Mozhiarasi Ashokan | Saidapet |
| 35 | Mr.Mohanadasse K. | Gowrivakkam | 78 | Mrs.Nirmala Chandrasekaran | Bangalore |
| 36 | Mr.Nagamani N. | Medavakkam | 79 | Mrs.Rajeshwari R. | Irungur, Arcot |
| 37 | Mr.Narasimhan M. | Korukkupet | 80 | Mrs.Rajeswari K.S. | Maduravoyal |
| 38 | Mr.Palanisamy K. | Muthukulathur | 81 | Mrs.Tamilselvi Kandasamy | Royapuram |
| 39 | Mr.Pandian G. (IOC) | Velachery | 82 | Ms.Susi | Orchid Chemical |
| 40 | Mr.Pandurangan A.G. | Shenoy Nagar | 83 | Ms.Tamilselvi | Orchid Chemical |
| 41 | Mr.Panneer Selvam K. | Choolaimedu | 84 | Prof. Muthukumaran K. | Sembakkam |
| 42 | Mr.Parthasarathy A. | Tharamani | 85 | Prof. P S T Sai | IIT Madras |
| 43 | Mr.Parthasarathy M. | Korukkupet | 86 | Prof. Ramanathan S. | IIT Madras |

பத்திடைஆயிரம் பகர் அதில்கோடி
அத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (624)

# தேவ தேவா! மஹா தேவா!!

சென்ற மாத தொடர்ச்சி...

இப்பழைமையில் புதுமை மிளிரச் செய்யாத வரையில் பழைமைகளால் எந்தப் பயனும் இல்லை.

ஆலயங்களை சக்தி நிலையங்களாக பயன்படுத்திட நாம் முனையவே இல்லை. மாறாக, வணிக வளாகங்களாக மாற்றிவிட்டோமே! ஒவ்வொரு பிரசித்தி பெற்ற ஆலயங்களைச் சுற்றி நடைபெறும் வியாபாரங்கள், ஏய்த்துப் பிழைத்திடும் வாணிபங்களாகவே நடைபெறுவதை மறுப்பதற்கில்லை.

நன்றி தெரிவிப்பதே வழிபாடு ஆகிவிடாது. வழிபாடு வெறும் சடங்குகளில் முடியக் கூடாது.

அறன் இழுக்கான செயல்களான அழுக்காறு – அவா – வெகுளி – இன்னாச்சொல் இந்நான்கும் மறைந்திட மனம் ஒன்றி துதிப்பது – விண்ணப்பிப்பது தான் தொழுகை – வழிபாடு. நெரிசலில் நசுங்குவது வழிபாடே அல்ல.

அன்பே சிவம், அன்பும்
சிவமும் இரண்டென்பன்பர் அறிகிலார். – திருமூலர்.

எம்மதம் எம் இறை என்ப உயிர்த்திரள்
அம்மதம் என்றருள் அருட்பெருஞ்சோதி
ஒன்றினில், ஒன்றுள ஒன்றினில் ஒன்றில
ஒன்றற ஒன்றிய ஒன்றெனும் ஒன்றே!!!

– வள்ளலார்.

இருளுடைய பவக்கடல் விட்டேறேன் என்னை ஏற்றுவதற்கெண்ணுக என் இன்பத் தேவே??

திருவாசகம் கேட்க வேண்டும் என மணிவாசகரைத் தடுத்தாட்கொண்டாய். சுந்தரமூர்த்தி நாயனாரை வழக்காடி வென்றாய். திருவருட்பா அருள வேண்டுமென வள்ளலாரை ஓதாது உணர்ந்திடச் செய்தாய். ஒளிவளர் அருள் ஓரிருவர்க்கு மட்டுமே தரும் இரகசியம் யாது?

தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். –குறள்

என எழுதுவதற்கு ஒருவரை அனுப்பிவைத்தாய். முயன்று, முயன்று பார்த்தும் ஓரடி கூட முன்னேற முடியாமல் தவிப்போரை வேடிக்கை பார்க்கிறாயே?

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்

என்று 2000 ஆண்டுகட்கு முன்னரே உம்மை எச்சரிக்கை செய்தாரே வள்ளுவர்.

இரந்துண்போர் தொகை குறையவில்லையே. இலவசத்திற்கு அலைவோர் தொகை இன்னும் அதிகம். இது தருமந்தானோ???

அறிவைக் கொடுத்தாய். உண்மை. ஆற்றலைக் கொடுத்தாய். துணிவைக் கொடுத்தாய். திறனைக் கொடுத்தாய். தேவையான அனைத்தையும் அபரிவிதமாகவே வழங்கினாய்.

ஆய்வுத்திறனை – நல்லவைகளை தெளியும் திறனை – நல்லவைகளை உணரும் திறனை – அவைகளோடு ஒன்றிடும் திறனை ஏன் அனைவர்க்கும் அளிக்காமல் ஒளித்து வைத்து வேடிக்கை பார்க்கிறாய்.

போர்கள் ஏன்? அன்று பாரதப் போரில் பாஞ்சசன்னியத்தை எடுத்து ஊதினாய் – பதினெட்டு அக்ரோணி சேனைகளையும் சாய்த்தாய். இது புராணம்.

வரலாற்று ஏடுகளைப் புரட்டினாலும், உலகின் அத்தனை நாடுகளிலும், ஏறத்தாழ 8000 ஆண்டுகளாக மனித உருவில் மிருகங்களே வாழ்ந்திருந்தன என்று அறிந்திட நெஞ்சம் பதறுகின்றது.

போர் முனைப்போடும் – சாம்ராஜ்ய வெறியோடும் வாழ்ந்த நமது மூதாதையர்களால் இன்றுவரை போர் ஓயவே இல்லை.

போர்க்குணம் ஒழியத்தான் மதநெறிகளை ஞானிகள் போதித்திருக்கலாம். ஆனால் அங்கேயும் போர். மதங்களிடையே போர். கடவுள்

**நூற்றிடை இலக்கம் நுவல் அதில் அனந்தம்**
**ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி (626)**

கொள்கைகளுக்கிடையே பிணக்கு. சொற்போர் – தொடர்வது விற்போர், மற்போர், இன்றும் தொடர்வதுதான் வேதனை.

ஈவு – இரக்கம் – காருண்யம் ஒளிந்து கொள்ளுமோ – காணாமல் போய் விடுமோ எனும் அச்சம் என்னைக் கவ்விக் கொண்டது.

அருளாளா! இனியும் தாமதிக்காதே – அன்று பாஞ்சசன்யம் போல் இன்று காருண்யக்குழல் ஊது.

அன்பின் ஆட்சி மலரச் செய்திடு. அழுகுரல் தேயட்டும். முற்றிலும் மறையட்டும். வழக்கின் இறுதியாக, இன்னுமொரு விண்ணப்பம் :

அரிதாகிய மானிடப் பிறவியைப் படைத்தாய். பிறப்பிக்குந்திறனைக் கொடுத்தாய். பிறவாமை வேண்டினார்களேயென்று பிறப்பிக்காமை திறனையும் (பிரம்மச்சரியம்) வழங்கினாய். நன்று. நன்றி!

ஆனால், பெரியதொரு பாதகமல்லவா செய்துவிட்டாய். பிறவிக்குருடு. பிறவியிலேயே பேச இயலாமை – பிறவியிலேயே கேளாமை – பிறவி முடம் – பிறிவியிலேயே மனநலமின்மை?

ஏன் இப்படிப்பட்ட படைப்புகள். இவை எங்கட்கு கடுமையான தண்டனையல்லவா? அங்கஹீனர்களாக ஏன் படைத்தாய். அவர்கள்படும் அல்லலைக் காண நேரிடும் போதெல்லாம் கணமும் சகித்திட இயலவில்லையே உமது படைப்பில் நீரே குறை வைக்கலாமா? ஏ கருணாமூர்த்தியே! காருண்யவானே!! விரைந்துவா! இனியும் இத்துயரை இப்புவி தாங்குதல் கொடுமை. அருளாளனாகிய உனக்கு அவப்பெயர் ஏற்படக்கூடாது.

இரத்தவெள்ளம் ஓடுகிறது ஒரு சில இடங்களில். 10 சதவிகித மக்கள் பட்டினி. 60 சதவிகித மக்கள் நோயாளிகள். 80 சதவிகித மக்கள் குற்றவாளிகள்.... மா பாவிகள். ஏன்? ஏன்?? ஏன்???

இவை உனக்கு சம்மதமா? இவை உனது இராஜ்யத்தில் நடக்கலாமா?

தேவ தேவா! மஹா தேவா!!

பேராற்றலாக, பெருஞ் சக்தியாக, விளக்கவொண்ணா விஸ்வரூபியாக எங்கும் பரந்து, எதிலும் நிறைந்து இருப்பவன் நீ என்பது மட்டும் மறுக்க வொண்ணாதது.

அடியேனின் சிந்ததைதனை தெளிவித்து, அச்சந்துயர் தீர்த்தே இற்றைப்பொழுதே அருட்ஜோதி ஈக தருணம் இதுவாமே!

ஆலயங்கள் சக்தி நிலையங்களாக வேண்டும்.
எங்கணும் அன்பின் ஆட்சி மலர வேண்டும்.
அங்கஹீனர் படைப்பு முற்றிலும் மறையவேண்டும்.

சுருக்கமாக, அழுகுரல் கேட்கக் கூடாது, அன்பின் ஆட்சியில் குறை ஏது? குற்றம் ஏது? கோபம் ஏது??

**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

---

## கூட்டுப் பிரார்த்தனை (175 வாரங்களக...)

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ, நோயிலிருந்து விடுபட, குழந்தைகள் கல்வி–கேள்விகளில் சிறந்து விளங்கிட, தனம்–தான்யம் பெருகிட பிரதி வியாழக்கிழமை மாலை 6.30 மணி முதல் சிறப்பு வழிபாடும், அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணமும், ஜோதி தரிசனமும் நடைபெறும். இந்த கூட்டுப் பிரார்த்தனையில் அனைவரும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள் இன்பத்தைப் பெற்று இன்புற்று வாழ அன்புடன் அழைக்கின்றோம். கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும் இடம்:

**நித்ய தீப தருமச்சாலை**

7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை – 600 042.
செல் : 8939376652.

**கோடியில் அனந்த கோடி பல்கோடி**
**ஆடுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (628)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில், கடந்த வாரம் முழுவதும் சென்னையில் பெய்த கன மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேடிச் சென்று அன்னம் பாலித்த அற்புதக் காட்சிகள்.
















RNI : TNTAM / 2010 / 35284 "REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP NO. TN/PMG/(CCR) / WPP-290/2017-2019 R.No.TN/CC(S)Dn/412/17-19

Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.

**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor : M. Balakrishnan**



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் சென்னையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த வாரம் முழுவதும் அன்னதானம் வழங்கிய போது உணவைத் தயார் செய்யும் அற்புதக் காட்சி.

**எங்கெங்கு இருந்து உயிர் ஏதேது வேண்டினும் அங்கங்கு இருந்து அருள் அருட்பெருஞ்ஜோதி**

தீபம் அறக்கட்டளையின் சார்பில் மழையினால் பாதிக்கப்பட்ட கல்குட்டை பகுதி பசியால் வாடிய குழந்தைகளுக்கு இரவு உணவு வழங்கிய போது எடுத்தக் காட்சி.



If undelivered Please Return to:

**DEEPAM TRUST**

(REDG. No. - 2035/07)

#30, Drowapathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.in
Web : www.deepamtrust.org

To
Shri. / Smt. / Dr.

Posted at Patrika Channel
Posted on 27-11-2017
Egmore, Chennai - 8